வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 9.3.2025 நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

- மொரிஷியஸ் தேசிய தின கொண்டாட்டத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்.

- நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2 ஆவது அமர்வு நாளை தொடங்கி, அடுத்த மாதம் 4 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

- விண்வெளி மற்றும் அணுசக்தி துறையில் பெண் விஞ்ஞானிகள் சாதனை படைத்து வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

- புதுச்சேரி 15 ஆவது சட்டப்பேரவையின் 6 ஆவது கூட்டத்தொடர் நாளை காலை துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்குகிறது.

மோடி (14)

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் அரசு முறை பயணமாக நாளை மறுநாள் மொரிஷியஸ் செல்கிறார். மொரிஷியஸ் தேசிய தின

கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ள பிரதமர், அந்நாட்டில் உள்ள சிவ்சாகர் ராம்குலம் தாவரவியல் பூங்காவையும் பார்வையிட உள்ளார். பிரதமரின் மொரிஷியஸ் பயணம் குறித்து செய்தியாளர்களிடையே பேசிய வெளியுறவுத் துறை செயலராளர் திரு விக்ரம் மிஸ்ரி இந்தியா-மொரிஷியஸ் இடையிலான நட்புறவு வரலாறு, கலாச்சாரம் மற்றும் இரு நாட்டு மக்களுக்கு இடையேயான உறவின் அடிப்படையில் அமைந்துள்ளது என்றும், பல நூற்றாண்டுகளாக இந்த நட்புறவு தொடர்வதாகவும் தெரிவித்தார். இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில், இந்தியாவின் முக்கிய நட்பு நாடாக மொரிஷியஸ் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார். கடந்த 10 ஆண்டுளில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் இந்தியா மொரிஷியஸ் இடையிலான உறவு மேம்பட்டு இருப்பதாகவும் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

*பிரதமர் வலைதளம்* (13)

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மகளிருக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். பல்வேறு பிரிவுகளில் செயற்கை நுண்ணறிவு மகளிர் மேம்பாட்டிற்கு துணை புரிவதாக அவர் தமது சமூக வலைதள பக்கத்தில் கூறியுள்ளார். முன்னதாக, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சமூகத்தில் பெண்களின்

ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை முன்னெடுத்து செல்வதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி சாவித்திரி தாக்கூர் தெரிவித்திருந்ததை சுட்டிக் காட்டிய, பிரதமர் இதனை தெரிவித்தார்.

பிரதமர் வெளியிட்டுள்ள மற்றொரு செய்தியில், 58 ஆவது புலிகள் சரணாலயம் மத்திய பிரதேச மாநிலத்தில் தொடங்கப்பட்டது குறித்து, குறிப்பிட்ட பிரதமர், வன விலங்குகளை பாதுகாக்கும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

*நாடாளுமன்ற கூட்டத்தொடர்* (9)

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2 ஆவது அமர்வு நாளை தொடங்கி, அடுத்த மாதம் 4 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 20 அமர்வுகளாக நடைபெறும் இந்த கூட்டத் தொடரில் 2025-26 ம் நிதியாண்டிற்கான மானிய கோரிக்கை மீதான விவாதங்கள் இடம் பெறும். வங்கி, கப்பல் போக்குவரத்து, ரயில்வே திருத்த மசோதாக்கள் மீதான விவாதங்களும் இத்தொடரில் இடம்பெறுகின்றன. இதனிடையே, கடந்த ஜனவரி 31 ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி 13 ஆம் தேதி வரை நடைபெற்ற முதல் கட்ட கூட்டத் தொடரில் மக்களவையில் 112 சதவிகித அலுவல்கள் நடைபெற்றதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை தெரிவித்துள்ளது.

தன்கர் (8)

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் உடல்நலக் குறைவு காரணமாக டெல்லி எயிம்ஸ் மருத்துவமனையில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு இதய நோய் பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், அவரது உடல்நிலை சீராக உள்ளதாகவும் மருத்துவர்கள் கூறியுள்ளனர். விரைவில் சிகிச்சை முடிந்து அவர் வீடு திரும்புவார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி எயிம்ஸ் மருத்துவமனையில் திரு தன்கரை சந்தித்து நலம் விசாரித்தார்.

ஜிதேந்திர சிங்(10)

விண்வெளி மற்றும் அணுசக்தி துறையில் பெண் விஞ்ஞானிகள் சாதனை படைத்து வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தேசிய அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் பல முக்கிய திட்டங்களில் பெண்கள் தலைமை பொறுப்பில் உள்ளதாக குறிப்பிட்டார். ஆராய்ச்சி பணிகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதற்கு அவர் பாராட்டு தெரிவித்தார். அறிவியல் மற்றும் தொழில்துறை

ஆராய்ச்சி குழுமத்தின் ஆய்வகங்களில் 6 பெண் இயக்குநர்கள் பணியாற்றி வருவதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அண்ணபூர்ணா தேவி (10)

நியூயார்கில் நாளை தொடங்கி, வரும் 21 ஆம் தேதி வரை நடைபெற உள்ள ஐநா மகளிர் ஆணையத்தின் 69 ஆவது அமர்வில் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அண்ணபூர்ணா தேவி பங்கேற்கிறார். இந்த அமர்வில் அமைச்சகத்தின் தேசிய அறிக்கையை வெளியிடும் அவர், பெண்கள் மற்றும் சிறுமிகளின் முழுமையான மேம்பாடு மற்றும் அதிகாரமளிப்புக்கான இந்திய அரசின் தொலைநோக்கு திட்டங்கள் பற்றியும், பெண்கள் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவது குறித்தும் விவாதிக்க உள்ளார். மேலும், திருமதி அண்ணபூர்ணா தேவி ஐநா தலைமையகத்தில் பல்வேறு நாடுகளை சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் கவுரவ விருந்தினராகவும் கலந்து கொள்கிறார்.

வேவ்ஸ் (5)

வேவ்ஸ் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெறும் அனிமேஷன் திரைப்பட தயாரிப்பாளர்கள் போட்டிக்கு இதுவரை 19 சர்வதேச

பங்கேற்பாளர்கள் உட்பட மொத்தம் ஆயிரத்து 290 போட்டியாளர்கள் தங்கள் பதிவுகளை சமர்பித்துள்ளனர். இம்மாநாட்டின் முதல் பதிப்பு மே 1 முதல் 4 ஆம் தேதி வரை நடைபெறும். இறுதிப் போட்டி பற்றிய அறிவிப்பு அடுத்த மாதம் வெளிவரும்.

புதுச்சேரி சட்டசபை(10)

புதுச்சேரி 15 ஆவது சட்டப்பேரவையின் 6 ஆவது கூட்டத்தொடர் நாளை காலை 9.30 மணிக்கு கூடுகிறது. துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதன் முறையாக நாளை சட்டப்பேரவையில் உரையாற்ற உள்ளார். நாளை மறுநாள் 11 ம் தேதி துணை நிலை ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படும். வரும் 12 ஆம் தேதி புதன் கிழமை நிதித் துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு ரங்கசாமி, 2024-25 ஆம் நிதி ஆண்டிற்கான, நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்ய உள்ளார். பட்ஜெட் கூட்டத் தொடர் 15 வேலை நாட்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

நாளை துவங்க உள்ள சட்டப்பேரவை கூட்டத் தொடரை முன்னிட்டு பேரவை தலைவர் திரு செல்வம் பேரவை அரங்கை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முருகன் (10)

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தி உள்ளார். செங்கல்பட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மீனவர்களின் மேம்பாட்டிற்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி உள்ளதாகவும், தமிழக மீனவர்கள் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தொடர் பேச்சு வார்த்தைகள் இலங்கை அரசுடன் நடைபெற்று வருவதாகவும் கூறினார். அனைவருக்கும் குடிநீர், இலவச சமையல் எரிவாயு இணைப்பு உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு வளர்ச்சி திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

மனோஜ்குமார் (15)

காதி மற்றும் கதர் தொழில் விரைவான முன்னேற்றம் கண்டு வருவதாக காதி கிராம தொழில்துறை ஆணையத்தின் தலைவர் திரு மனோஜ்குமார் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் காணொளி மூலம் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், காதி பொருட்களின் விற்பனை 5 மடங்கு அதிகரித்துள்ளதாக கூறினார். பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளாவின் போது 12 கோடி ரூபாய்க்கும் அதிகமான காதி தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதை அவர்

சுட்டிக்காட்டினார். கிராமப்புறங்களில் தேன் சேகரிப்பு இயக்கத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார். இதனை ஊக்குவிக்கும் வகையில் 6 மாநிலங்களில் உள்ள தேனீ வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 2 ஆயிரத்தி 500 க்கும் அதிகமான தேன் சேகரிப்பு தொட்டிகளை அவர் வழங்கினார். மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் கடந்த நிதியாண்டில் 10 லட்சத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு மனோஜ்குமார் தெரிவித்தார்.

*அனுபிரியா* (9)

நாட்டு மக்கள் அனைவருக்குமான உயர்தர சுகாதார சேவைகளை வழங்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார். புதுடெல்லி தேசிய சுகாதார நிறுவனத்தின் 48 ஆவது ஆண்டு தின நிகழ்ச்சியில் பேசிய அவர், ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை வழங்குவதில் புதிய மைல்கல் எட்டப்பட்டுள்ளதாக கூறினார். நாட்டில் தற்போது 22 எயிம்ஸ் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் செயல்படுவதாகவும், 2014 ல் 380 ஆக இருந்த அரசுமருத்துவ கல்லூரிகள் தற்போது 787 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விமான சேவை(7)

திருச்சி-யாழ்பாணம் இடையே இம்மாதம் 30 ஆம் தேதி முதல் நேரடி விமான சேவை தொடங்கப்படுகிறது. இண்டிகோ ஏர் லைன்ஸ் நிறுவனத்தின் இந்த விமான சேவை வாரத்தில் 6 நாட்கள் இருக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. திருச்சியில் இருந்து பிற்பகல் 1.25 மணிக்கு புறப்படும் விமானம், பிற்பகல் 2.25 மணிக்கு யாழ்பாணத்தை சென்றடையும். மறு மார்க்கத்தில் யாழ்பாணத்தில் இருந்து பிற்பகல் 3.10 மணிக்கு புறப்பட்டு, மாலை 4.05 மணிக்கு திருச்சியை வந்தடையும்.

கலிபோர்னியா (8)

கலிபோர்னியாவில் உள்ள கோவில் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால், காழ்ப்புணர்ச்சி காரணமாக நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில், சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அமெரிக்காவில் உள்ள கோவில்கள் உள்ளிட்ட வழிபாட்டு தலங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*சாகித்ய அகடமி* (5)

திருநெல்வேலியை சேர்ந்த கல்லூரி பேராசிரியர் திருமதி விமலா 2024 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகடமி மொழி பெயர்ப்பு விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். மலையாள எழுத்தாளர் நளினி ஜமிலா எழுதிய **என்ட ஆண்கள்** என்ற நூலை மொழி பெயர்த்ததற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. அவர் இதுவரை 4 மொழி பெயர்ப்பு நூல்களை எழுதியுள்ளார்.

*விளையாட்டு* (10)

கேலோ இண்டியா குளிர் கால விளையாட்டு போட்டிகள் ஜம்மு காஷ்மீரின் குல்மர்கில் இன்று தொடங்கி நடைபெறுகிறது. பனிச்சறுக்கு, ஐஸ் ஹாக்கி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளன. கடந்த மாதம் 22 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை நடைபெறுவதாக இருந்த இப் போட்டிகள் குறைவான பனிப் பொழிவு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது.

துபாயில் நடைபெற்று வரும் இந்தியா-நியூசிலாந்து அணிகள் இடையிலான ஐசிசி சாம்பியன் கோப்பை இறுதி ஆட்டத்தில் முதலில் ஆடிய நியூசிலாந்து அணி ------- ரன் எடுத்துள்ளது. ----- ரன் என்ற வெற்றி இலக்கோடு விளையாடி வரும் இந்திய அணி சற்று முன் வரை -------- ஓவரில், ---------- விக்கெட் இழப்பிற்கு, ---------- ரன் எடுத்துள்ளது.